

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி நேற்று (18.09.2025) கரூர் மாவட்டம், குளித்தலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் (குளித்தலை) மற்றும் குளித்தலை சார் ஆட்சியர் திருமதி. தி.சுவாதி ஆகியோர் உள்ளனர்.

### சின்னத்திரை – வண்ணத்திரை மூலம்

# தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர்!



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, செப். 19-

சின்னத்திரை - வண்ணத்திரை மூலம் தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர் என்று அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரைக்கலைஞர் ரோபோ சங்கர் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**திரைக்கலைஞர் ரோபோ சங்கர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். மேடைகளில் துவங்கி, சின்னத்திரை - வண்ணத்திரை என விரிந்து, தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர்.**

**அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் - கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### 66,78 லட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தரும்

# முதல்வருக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சாமு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர் செப் 19

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில் நடைபெற்றது. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி எம்எல்ஏ, கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாநகர செயலாளர் சன் பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட செயலாளரும், தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சாமு.நாசர் ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது,

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி ஒன்றியம் செம்பரம்பாக்கத்தில் நாளை 20 ஆம் தேதி காலை 9 மணி அளவில் தமிழ்நாடு குடிநீர் வர்க்கால் வாரியத்தின் மூலம் ரூ. 66.78 லட்சம் மதிப்பீட்டில் இரண்டாவது திட்டமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.

எனவே இந்த திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஒவ்வொரு மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களும், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் பல்லாயிரக்கணக்கில் தொண்டர்கள் மற்றும் பொது மக்களை அழைத்து வந்து வழி நெடுகிலும் நின்று மத்திய மாவட்ட திமுக சார்பில் மிகப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இந் நிகழ்ச்சியில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஒன்றிய, நகர செயலாளர்கள் ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், பேபிசேகர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், ஜி.ஆர். திருமலை, சே.பிரேம் ஆனந்த், தி.வை.இரவி, என்.இ.கே.மூர்த்தி, டி.முரளிகிருஷ்ணன், தங்கம்முரளி, தி.வே.முனுசாமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் இந்நாள் முன்னாள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. – வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக் கூட்டம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்- டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர் செப் 19;

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலையை குனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் 2109 2025 அன்று மாலை 5 மணி அளவில் திருவள்ளூர் மருத்துவ கல்லூரி டோல்கேட் பகுதியில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலை வகிக்கிறார் நகர செயலாளர் சி.சு ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் இந் கூட்டத்தில் கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி, அமைச்சர் ஆவடி சாமு நாசர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி, தலைமைக் கழக பேச்சாளர்கள் கொரஞ்சூர் எஸ்.முனுசாமி, முரசொலி மூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் சேகர், சண்முகநாதன், மாநில நிர்வாகிகள் ஆர். டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி. ஜெயபாரதி, எம். மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவீந்திரநாத்,

ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், கூளூர் எம். ராஜேந்திரன், மோ.ரமேஷ், தா.கிறிஸ்டி அன்பரசு, G.ரவிந்திரா ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், கே.அரிகிருஷ்ணன், பெ.பழனி என். கே.கிருஷ்ணன், பிடி.சந்திரன், கே.ராஜேந்திரன், சி.ஜே.சீனிவாசன், ஏ.எல். விஜயகுமார், வி.வினோத்குமார், டி.ஆர். கே.பாபு, மா.ரகு பா.சம்பத், சி.ஜெ.செந்தில்குமார் ஆர். ஜெயசீலன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், முரளிசேனா, வி.எஸ்.நேதாஜி பி.கே.நாகராஜ், எம்.பன்னீர்செல்வம் பூண்டி எம்.எஸ்.அருண்குமார் ப.கோபால், சரஸ்வதி சந்திரசேகர், ஜெகஜீவன்ராம், கோவிந்தம்மாள் சி.சு.விஜயகுமார், ஜெய்கிருஷ்ணா, என்.நந்தகோபால், சிலம்பு பன்னீர் செல்வம் கே.மதுசூதனன், எஸ். குமரன் ஜி.சித்திக் அலி ஜி. தினேஷ், உதயசூரியன், மத்தும் பன்னீர்செல்வம், உள்பட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் எனவே மேற்படி கூட்டத்திற்கு ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியில் இருந்து பெருந்திரளாக கூட்டத்தை கூட்டி 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்க வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

# எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61-ல் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்



சென்னை,செப்.19-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, எழும்பூர், ஈ.வெ.ரா. மணியம்மை சாலை, ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள சுராஜ் மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமைத் தொடங்கி வைத்து, மனுக்களை அளிக்க வந்த பொது மக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார். மேலும், பிறப்புச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்த பயனாளர் ஒருவரின் மனுவைப் பரிசீலித்து, அவருக்கு முகாமிலேயே பிறப்புச் சான்றிதழை வழங்கினார்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, பொதுமக்களின் குறைகளை அவர்களின் வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் ஜூலை 15, 2025 முதல் நவம்பர் 2025 வரையிலும் 10,000 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் குறித்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் நடத்தப்படும் முகாம்களில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்கிட மருத்துவ முகாமும் நடத்தப்படுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.61 க்குட்பட்ட பொதுமக்களுக்கான “உங்களுடன் ஸ்டாலின்” முகாம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில், 18.09.2025 அன்று ஈ.வெ.ரா. மணியம்மை சாலை, ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள சுராஜ் மஹாலில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, காவல்துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் பெறப்பட்டு, உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்கான ஒப்பமும் வழங்கப்பட்டது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் இம்முகாமைத் தொடங்கி வைத்ததோடு, முகாமில் இடம் பெற்ற ஒவ்வொரு அரசுத் துறை பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டு, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தெரிவித்தார். இம்முகாமையொட்டி நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு, மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

மேலும், பிறப்புச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்த பயனாளர் ஒருவரின் மனுவைப் பரிசீலித்து, அவருக்கு முகாமிலேயே பிறப்புச் சான்றிதழை வழங்கினார்.

இம்முகாமில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5இன் செயற்பொறியாளர் பழனி, உதவி செயற்பொறியாளர் கண்ணன், 61வது வார்டு உதவிப் பொறியாளர் சஞ்ஜீவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

மற்றும் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், அவைத் தலைவர் வெ.மருதன், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே. சீனிவாசன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாறன், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், 99 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.குணா, கோமகன், தேவநிதி, ஜெ.சரவணன், குணசேகர், தர்மலிங்கம், செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

### தியாகராயர்நகர் கிழக்கு மேற்கு பகுதி தி.மு.க.

# வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

சென்னை, செப். 19

தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.09.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில், தியாகராயர்நகர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தலைமையில் தியாகராயர்நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:

நாளை (21.09. 2025 சனிக்கிழமை) கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மயிலை மேற்குப் பகுதி கழக ஆலோசனை கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, செப்.19-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனை வழங்குகிறார்.

பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் பகுதி துணைச் செயலாளர்கள் ஆர்.எல்.விஅசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பகுதி பொருளாளர் ஜி.முருகையன் முன்னிலையில் இன்று (19.09.2025 - வெள்ளிகிழமை) காலை 11.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள மயிலாப்பூர் சட்டமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ்குமார், ஆ. நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன் மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

செப் 21 அன்று நடைபெறும் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு நந்தனம் கி.மதி அறிக்கை விடுத்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சி மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம்,கானத்தூர் ஊராட்சியில் மாவட்ட செயலாளர், அமைச்சர் தாமோ. அன்பரசன் வழிகாட்டுதல்படி, இதயவர்மன் அறிவுறுத்தல்படி ‘தமிழ்நாட்டை ஒருபோதும் தலைகுனிய விடமாட்டேன்’என உறுதிமொழி ஏற்கப்பட்டது.இதில் கழக மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப், கானாத்தூர் எட்டியப்பன்,ரெட்டி குப்பம் கிளைச் செயலாளர் எம். சௌந்தர பாண்டியன்,பிலால், நகர் கிளை செயலாளர் ஏ. ரியாசுதீன்,மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பி. சிவமணி.ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் ச. பாகர்சேட்,ஒன்றிய மீனவர் அணி துணை அமைப்பாளர் இளங்கோவன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



புனித தோமையார் மலை ஒன்றிய முடிச்சூர் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாள் விழா முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு முடிச்சூரில் அமைந்துள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு மூன்று வேளை அறுசுவை உணவு பா.தாமோதரன் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய பொறுப்பாளர்கள் மஞ்சு ஜெயபால், சங்கர், வார்டு உறுப்பினர்கள், சத்யா சந்திரன், புனிதா ராஜா, எல். லோகநாதன், வி.ஆர்.குமார், சிவலிங்கம், துணைச் செயலாளர் வெங்கட்ராமன், சுந்தரம், ராஜமாணிக்கம், குப்புசாமி, ராஜ்குமார், கிருஷ்ணமூர்த்தி, அமிர்தலிங்கம், சண்முகம், சிவாஜி, மோகன், மனோகரன், ராஜா, பாதர், சுப்புராயன், ஆனந்தன், நாகப்பன், சிவா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலை கிழக்கு - மேற்கு பகுதி மகளிரணி நிர்வாகிகள் கூட்டம்!

## அ.ரேவதி எம்.சி. – கவிதா குமரி முத்து அறிவிப்பு!

சென்னை, செப். 19-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி மற்றும் மேற்கு பகுதி மகளிரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (19.09.2025 - வெள்ளிகிழமை) மாலை 6 மணி அளவில் சி.பி.ராமசாமி சாலை உள்ள அலுவலகத்தில் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி நந்தனம் கி.மதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு மயிலை பகுதி மகளிர் அணி பகுதி வட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : முப்பெரும் விழா பொதுகூட்டம் கழக ஆக்க பணிகள் குறித்து.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் அ. ரேவதி எம்.சி., மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் கவிதா குமரிமுத்து ஆகியோர் அறிவித்துள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொ.மு.ச பேரவை அறிவுறுத்தலின் பேரில் மா.போ.கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் மாதவரம் பணிமனை சார்பில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன். என்கின்ற உறுதிமொழி ஏற்பு ஏ.தங்கராஜ், தலைமையில் பி.ரவீச்சந்திரன் முன்னிலையில் பி.டி.சி.ஆர்.ரமேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கோ.பாஸ்கரன், ப.ராமு கோபால், ஆர்.பிரபாகரன், பி. ஆத்மநாபன், தேவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.